பிரஜாநுகூலன்.

OFFICE OF THE REGISTRAR
23 OCT 1915

அநுபவவிஷயங்களடங்கிய மாதப்பத்திரிகை.

பத்திராதிபர்:—எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

சந்தா ரூ. 1—5—0.] Copy Right [வெளிநாடு ரூ. 1-12—0.

புத்தகம் 10	திரிச்சிராப்பள்ளி அக்டோபர் மீ 1915.	சஞ்சிகை 2.

நமது பத்திரிகை

நமது "பிரஜாநுகூலன்" பத்திரிகைக்குத் திரிச்சினுப்பள்ளியில் சரியான அச்சுக்கூடம் கிடைக்காமல் நாம் வெகு சங்கடப்பட்டுக்கொண்டிருந்தோம். குறித்த காலங் கடந்தே அச்சாபீஸார் நினைத்தபோது நமது வேலைகளைத் தொடங்குவதாயிருந்ததால், நாம் எவ்வளவு பிரயத்தனப்பட்டுங்கூட காலத்தில் வெளிப்படுத்தக் கூடாமலாகிவிட்டது. இப்போது நமது பத்திரிகையைச் சென்னையில் அச்சிட்டு, திரிச்சியில் வெளிப்படுத்துவதென்று புது ஏற்பாடு செய்யப்பட்டு, அந்த வகையில் முதல் பத்திரிகையாக இந்த ஸஞ்சிகை வெளியேறுகின்றது.

பத்திரிகையின் உருவ முதலியவற்றில் திருத்தங்கள் செய்தும் புதுவிதமான அமைப்புடனும் பிரசுரிக்கவேண்டியிருந்ததில் செப்டம்பர் மாதத்தில் பத்திரிகையை வெளிப்படுத்த முடியவில்லை. எனினும் மாதம் விட்டுப்போயிற்றேயன்றி ஸஞ்சிகை விட்டுப்போகவில்லையென்பதைப் பத்திரிகையின் இலக்கம் நன்கு தெரிவிக்கும். இனி, பிரதி மாதமும் 5-ம் தேதியில் தவருது பிரசுரமாகிவரும்.

☞ இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்கள் சட்டப்படி காபிரைட் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் தனிப் புஸ்தக ரூபமாக அச்சிடப்படுமாதலின், இப்பத்திரிகையிலிருந்து எந்த விஷயத்தையும் யாரும் எடுத்துப் பதிப்பிக்கக்கூடாது.

நமது பத்திரிகையில் நாவல்கள் பிரசுரமாகி ஒரு வருஷமாகின்றது. நாவல் ஒன்று எழுதிவிடுவதென்பது சாதாரண வேலையன்று. அதிலிருக்கும் கஷ்டம் அநுபவித்தவர்களுக்குத் தான் தெரியும். இம்முறை நமது பத்திரிகையில் பதிப்பிக்கப்பட்டுள்ள பிரேமநாதன் கதை நமது ஒன்றரை வருட உழைப்பினால் தயாரானது. அது துப்பறியும் நாவலாகும். ஸஞ்சிகைகள் தவறிப்போனால் பதில் ஸஞ்சிகைகள் அனுப்புவதற்கு முடியாது.

ஆநந்தகதாகல்பகம்—வெகு திவ்யமான நூல். இன்னும் 120 பிரதிகளே இருக்கின்றன. மொத்தவியாபாரிகளுக்குத் தராமல் ஜனங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றெண்ணிக் கையிருப்பில் நிறுத்திக்கொண்டிருக்கிறோம். படித்து இன்புறுதற்குப் பாக்கியம் செய்திருக்கவேண்டும். அவ்வளவுதான் நாம் சொல்லக்கூடும்.

☞ அடுத்த வாரத்தில் புது வருஷ சந்தாவுக்காக நமது நேயர்களுக்கு வி. பி. கள் அனுப்புவோம். அன்பர்கள் ஒப்புக்கொண்டு நமது முயற்சியை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். பிரஜாநுகூலன் பத்திரிகை **1904**-ம் வருட முதற்கொண்டு நடைபெறுகின்றது. இதுவரை ஆதரித்த நேயர்கள் இனியும் ஆதரித்து வருவார்களென்று நம்பியிருக்கிறோம். பத்திராதிபர் படுங் கஷ்டத்தைச் சந்தா நேயர்கள் தங்களுடையகஷ்டம்போல் மனதிற் பாவித்து எல்லா விதத்திலும் அவருக்கு உபகாரிகளாய் நின்று அவரை உற்சாகப்படுத்தவேண்டும். இப்பொழுது பிரஜாநுகூலன் பத்திரிகை 38-பக்கங்களுடன் வெளியாகிறது. வருஷத்தில் 456 பக்கங்களாகின்றன.

உமியும் தவிடும் கலந்த அரிசியை ஜனங்கள் விரும்புகிறார்களோ? சுத்தமான அரிசியை விரும்புகிறார்களோ? கல்லோடு கலந்த அன்னத்தைக் கண்டால் வெறுப்படைகிறோம். கல்லில்லாத அன்னத்தைக் கண்டால் தடையில்லாது உட்கொள்ளுகிறோம். கல்லைப் பொறுக்கி யெறிய சில வேளைகளில் தாமதமுண்டாகும். அது போல் நல் விஷயங்களைப் பொறுக்கி யெழுத நேரமாகும். அதில் சிரமமும் அதிகம். இதனை நமது நண்பர்கள் நன்கறிவார்களென்று நம்புகிறோம். ஸதாகாலமும் உங்களுக்கு மங்களத்தைக் கோரும்

பத்திராதிபர்.

பிரேமநாதன்

அத்தியாயம்—1

அவள் என் மனைவி

"ஆயிற்று ? உடனே வரட்டும் மோட்டார் ; கொண்டு வா—சீக்கிரம்—ஒரு டம்ளர் காபி !"

"அப்படியே."

"சரி !—டெலிபோன் பேச்சுத் தீர்ந்தது ; இனி—புறப் படவேண்டியதே. சிறகு கட்டின குதிரைக ளிருந்தால் எவ் வளவு ஆநந்தமா யிருப்பேன் ! ஆஹா ! இந்தக் கண்ணாடி யில்—என்னுடைய வேடம்—எத்துணைப் பொருத்தம் ;— உண்மையில், ஒரு ஸ்திரீயைப் போலவே தோன்றுகின் றது. யானே இப்பெண்ணின் உருவம் என்று எவர் மன திற்கேனும் படுமோ ? ஏது ?—இல்லை, இல்லை—தோன்றவே தோன்றாது. நடையிலோ—உடையிலோ—பாவனையிலோ— பேஷ் ! பேஷ் !! முற்றிலும் சரி !!! எத்தகையினரும் என்னை இனித் தெரிதல் இயலாது. இவ்வேடத்துடனும் ஒரு கோலையை நிகழ்த்திவிட்டு, உடனே புருஷ ரூபமானால்

" அவளே—இவன் " என்று இயம்புதற்கு,—இல்லை, ஸம்சயிப்பதற்கேனும்,— சாத்தியமா ? இன்று பூரணஜெயந் தான்———"

" ஆம். "

" எவருடைய தொனி யிது ?—பேசுகிறது யார் ? "

" நானே ! தெரிகிறதா ? "

" இன்ஸ்பெக்டரா ?—இஃதென்ன போலீஸ் கூட்டம் ? எதற்காக ? "

" என்னைக் கேட்பானேன் ? உமக்கே தெரிந்திருக் குமே ! "

" தாங்கள் இவ்வளவு படபடத்துப் பேசுவதற்கு அர்த்தமென்ன ? "

" நீர் மிகவும் சாதுரியமான புருஷர் ! மிகு நன்றாக அபி நயிக்கிறீர் ; ஆனால் இது நாடகசாலை யன்று. "

" இவ்வாறான பேச்சுகளால், என்னை அவமானப்படுத் தும் ஸந்தோஷத்தைத் தவிர உமக்கு ஏதேனும் நன்மை யுண்டா ? "

" இன்னும் என்ன சொல்வீர் ? "

" இப்படி உள்ளது கூறாமல் வார்த்தைகளைப் பெருக்கு வோர் மகா கடும் சித்தமும், பிறர் நாசத்தில் பிரியமும் உள்ள வர்களென்று ஏன் சொல்லுதல் கூடாது ? "

"ரங்கபாஷியம் நாயுடுகோர் ! தத்துவ விசாரம் செய்ய ஆரம் பித்து விட்டீரா ? இந்த நிமிஷ முதல் நீர் என்னுடைய கைதி யாகிறீர். "

" கைதியா ?—நானா ?—என் ஹிருதயமே, நீ உடைந்து போ. நான் இனி வாய் திறத்தலாகாது. இப்படியும் வந்ததா காலம் ! "

" உம்முடைய பி. ஏ. பட்டத்திற்கேற்ப வார்த்தைகளை

யும் மடமடவென்று கொட்டுகிறீர். கற்றதற்குப் பயன் நன்னெறியில் நிற்றல். அஃதில்லாவிடில் என்ன பிரயோஜனம்?"

"உங்களுடைய கைதியாக என்னை நீங்கள் சொல்வதைப் பார்த்தால், சுமார் 1300 வருஷங்கட்கு முன்னால் ஈஜிப்ட் தேசத்தில் "அலக்ஸாண்டிரியா" என்ற மகா பட்டணத்திலிருந்த ஒரு புஸ்தகசாலையை, அதை வென்ற ஒரு மகம்மதியப் போர்வீரன் இரக்கமின்றி அழித்தது ஞாபகத்திற்கு வருகின்றது."

"இதுவும் உம்முடைய பி. ஏ. படிப்பின் பிரசங்கந்தான்! அதற்கும், உம்மை நான் கைதி என்றதற்கும் என்ன பொருத்தம்?"

"பொருத்தமா?—தெரிவிக்கிறேன். அந்தப் புஸ்தகசாலையை அந்த மகம்மதியப் போர்வீரன் என்ன சொல்லி அழித்தானென்றால்,—'அந்தப் புஸ்தகசாலையிலுள்ள புஸ்தகங்கள் மகம்மதிய வேதமாகிய கொரானில் உள்ள கருத்துகளே அடங்கினவையா யிருக்கும் பக்ஷத்தில் அவைகள் அநாவசியம்; ஆகையால் அழித்து விடலாம்: அல்லது கொரானுடைய கருத்துகளுக்கு விரோதமாகிய கருத்துகள் அடங்கினவையா யிருக்கும் பக்ஷத்தில், அவைகள் வேதத்திற்கு முற்றும் எதிரிடையானபடியால் அவைகளை வைத்திருத்தல் தகாது,—' என்று சொல்லி அழித்து விட்டான். அம்மகம்மதியப் போர்வீரன் தன் செயலுக்கு ஏதோ நியாயம் சொன்னான். தாங்கள் ஒரு நியாயமு மில்லாமல் என்னைத் தங்களுடைய கைதி யென்று வெகு சுலபமாய்க் கூறத் துணிவு கொண்டு விட்டீர்கள்."

"நீர் எத்தனைதான் ஸமத்காரமாக வார்த்தையாடிய போதிலும் நிரபராதியாதல் கஷ்டம். நீர் கைதி—கைதிதான்."

"கைதியா—அது எப்படி?"

“பிரேமநாதனைக் கொலைசெய்த குற்றத்திற்காக!”

“ஐயோ! பிரேமநாதனா!!—அதுவும் கொலைசெய்யப் பட்டா?—எவ்விடத்திலே?”

“போலீஸ் உடையின் முன்பு—உம்முடைய இந்த ஸாகசங்கள் பிரயோஜனமில்லை. வேண்டுமானால் பின்னுமோர் முறையும் செவ்வனே பார்த்துக் கொள்ளும். அதோ கூடத்திற்கு அருகே—கதவோரத்தில்———”

ரங்கபாஷியம் நாயுடுவின் பஞ்சேந்திரியங்களும் அவருடைய ஸ்வாதீனத்தில் இல்லாமற் போய்விட்டன. இன்ஸ்பெக்டருடைய வார்த்தைகள் முடிவதற்குள் சவத்தினருகே ஓடிவந்து, அதனைக் கண்டு சிறிதும் ஆற்றமாட்டாது அலறிக்கொண்டு நினைவழிந்து வீழ்ந்தார். “கொடுமை! கொடுமை!! எனக்கு இனி மிகுந்திருப்பது ஒன்றுமே யில்லை” யென்று கதறினர். “அச்சோ! ஈடு செய்தற்கரிய நஷ்டம் நேர்ந்து விட்டதே! என்னுடைய எச்சரிக்கைகளை யெல்லாம் அலக்ஷியம் செய்து துரோகிகள் இழைக்கக் கருதிய தீங்குகளை ஸ்திரப்படுத்தி விட்டனையே! ஹா! பணமன்றோ இத்தனைக்குங் காரணம்? ஏனைய கண்டத்தினர் வருந்தி யுழைத்துப் பொருள் தேட முயல, நம்மவர்களோ—பணம் புதையலில் அகப்படுமென்றும், அல்லது காசை ரஸவாதத்தால் பொன்னாக்கலாமென்றும், கோர்ட்டு வழக்குகளில் ஸம்பாதிக்கலாமென்றும், ஒன்றுமில்லாவிட்டால் பிச்சை யெடுக்கலாமென்றும், கருதுகின்றனராக,—இங்ஙனம் மனோரதம் புரியும் ஜனங்கள் எப்படிச் செல்வவான்க ளாவார்கள்? இத்தவறு வழியில் பிறர் மேன்மைப்படுதற்கோ—பிரேமநாதா நீ இறந்தாய்? நீ ஊர் வந்து சேர்ந்ததும் என் ஹிருதயம் நவநவமான அவாக்களாலும், ஸக்திகளாலும் தூண்டப்பட்டுத் துடித்துக்கொண்டிருந்ததே! என்னுடைய ஜீவவாழ்க்கையில் புது ஸக்தியின்

அலைகள் புரளத் தொடங்கி விட்டதென்றும், இக்குடும்பத்திற்கே இனி ஒரு புது ஜீவனுண்டாகிவிடுமென்றும் சிந்தை பூரித்தேன்! அப்பா! பிரேமநாதா! ஸகலமும் நீயே யென்று உன்னை நம்பி, என்னென்னவோ நினைந்து அறிவு மயங்கினேனே! 'சேத்தாரைச் சாவார் சுமந்து,'—ஹா! இறந்து விட்டவர்களை, இனி சாகப் போகிறவர்கள் சுமந்து செல்லும் உலகமிஃதென்பதை—பிரேமநாதா! நீ உண்மைப் படுத்தி விட்டாய்! இனி உன்னைப் பிரிந்து யான் உய்தலாற் பயனென்னையோ! ஐயோ தெய்வமே!!——"

இன்ஸ்பெக்டர்—"பிரலாபத்திலும் உம்முடைய பி. ஏ. படிப்பைக் காண்பிக்கிறீர்! அதனுள்ளும் உமது தேசாபிமானத்தைப் புலப்படுத்திக் கொள்கின்றீர்! கையும்மெய்யுமாக உம்மை நான் பிடித்திருக்கிறபோது, இவ்வித சாதுர்யங்களால் எங்களுடைய உத்தேசத்தை மாற்றிவிடலாமென்பது உம்முடைய எண்ணமா?"

ரங்கபாஷியம்—"என்ன ஆதாரத்தின் பேரில் நானே இக்கொலையைச் செய்தேனென்று கருதுகின்றீர்?"

இன்ஸ்பெக்டர்—"இவ்வளவு பிரத்தியக்ஷமான ருசுக்கள் இருந்தும், நீர் குற்றவாளி யல்லவென்ருகி விடுவதா யிருந்தால்—இந்த என்னுடைய 23-வருஷ ஸெர்விஸும் பயனற்றதாகத்தான் நான் கருதவேண்டும்."

ரங்கபாஷியம்—"என்னுடைய மனதைக் குழம்பச் செய்து என் கால்களைச் சுற்றி சிக்கிக் கொண்டிருக்கும் இந்தக் கஷ்டமான பிரசினையைப்பற்றி இப்போதுள்ள யோசனைகளோடு நான் புதிதாய்ச் சேர்க்கக்கூடிய தொன்றுமில்லை. நான் எவ்விதத்தில் குற்றவாளி? அதைச்சொல்லும்."

இன்ஸ்பெக்டர்—"எவ்விதத்திலா?—நல்லது—பெண் வேடம் புனைந்தது எதற்காக? பிரேமநாதனைக் கொன்று

விட்டு, வசீகரமான பெண்ணுருவமாக மாறி, மோட்டாரில் ஆரோகணித்து ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று மறைவதற்காகவன்றோ? மேலும் திரிச்சியிலிருந்து சென்னைக்கு ஒரு சாதாரண ஸைக்கிலில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்த தீரனன்றோ நீர்! மறைந்து கொள்வதற்கு உமக்கு வழிவகைகளை இன்னொருவர் கூறவா வேண்டும்?"

ரங்கபாஷியம்—"எவ்விதத்திலும் நான் தப்பிவிடாதபடிக்கு நேர்த்தியாக வலையை வீசிக் கேஸைத் தயாரித்து விட்டீர். உம்முடைய 23-வருஷ ஸெர்விஸூம் வீண்போகவில்லை!"

இன்ஸ்பெக்டர்—"உமக்கு ஏதாவது சொல்லிக்கொள்வதற்குப் பிரிய மிருக்கிறதா?"

ரங்கபாஷியம்—"நிரபராதிகளான என் போன்ற ஏழைகளின் பாத்தியங்கள், பெரிய உத்தியோகம் செய்வோருடைய கூட்டத்தில் எளிதாய் ஏறுவதில்லை. எனக்கு மரணம் ஒரு பொருட்டல்ல; என்னுல் என் பிரிய ஜீவமாணிக்கமான பிரேமநாதன் கொலையுண்டான் என்று சொல்லப்படுகிறதே,—அது தான் என் உள்ளத்தைக் கொதிக்கவைக்கின்றது; என் புத்திக்கே ஒன்றும் தோன்றவில்லை. ஆட்டம் முடிந்து கூட்டங் கலைந்து காலியாய்விட்ட நாடகமேடை போன்று இவ்வுலகம் என் கண் முன்பு தோன்றுகின்றது."

இன்ஸ்பெக்டர்—"இக்கொலையை நீர் செய்ததின் உத்தேசமென்ன? இறந்தவனுக்கும் உமக்கும் விரோதமா?"

ரங்கபாஷியம்—"நாடாண்டதும் பாண்டவர்கள் என்கிறுர்கள்; காடாண்டதும் பாண்டவர்கள் என்கிறுர்கள்; சகுனிமாமா! நாம் என்னத்தை யாண்டோம்?"

இன்ஸ்பெக்டர்—"நான் கேட்பதென்ன?—நீர் சொல்வதென்ன?"

ரங்கபாஷியம் :— " அவனாலே— அவனாலே— அவனாலே—"

இன்ஸ்பெக்டர்—" உளறுகின்றீரே! உமக்கென்ன சித்தப்பிரமையா ?"

ரங்கபாஷியம்—" அவனாலே—நமக்கென்ன சுகம்—போனுப்போருண்டி—"

இன்ஸ்பெக்டர்—" போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன பிறகு வேண்டிய கீதங்கள் இசைக்கலாம்: இப்போது நான் கேட்பதற்கு மட்டும் பதில் சொல்லும்."

ரங்கபாஷியம்—" நம்மை விட்டுப்—போனபின்பு—நமக்கேனவன்மேல்—அன்பு ?—அவனாலே—அவனாலே—"

இன்ஸ்பெக்டர்—" பைத்தியத்தினால் தவ்றிக் கொன்றதாகக் கேஸை மாற்றிவிடலாமென்று செய்கிற சூழ்ச்சியா இது ?"

ரங்கபாஷியம்—" அடா கர்ணா! தேரோட்டி மகனே! உங்கள் புத்தியும் சரி!—கழுதை லத்தியும் சரி!—அவனாலே—அவனாலே—"

இன்ஸ்பெக்டர்—" உம்முடைய பிடிவாதத்தை விடமாட்டீர் ?"

ரங்கபாஷியம்—"என்ன சுகம்-போனுப்போருண்டி!—"

இன்ஸ்பெக்டர்—ரங்கபாஷியம் நாயுடு! நல்ல உபாயமெடுத்தீர்! பேஷ்!"

ரங்கபாஷியம்— " அவனாலே— அவனாலே— அவனாலே—"

ரங்கபாஷியம் நாயுடு தம்மை என்ன வினவியபோதிலும் " அவனாலே—அவனாலே" என்ற பல்லவியையே திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தார். இன்ஸ்பெக்டர் நரஸிம்மராவ் இனி இவரைக் கேட்பதிற் பயனில்லையென்று

அங்கு வந்திருந்தவர்களிடத்தில் சாக்ஷியங்கள் வாங்கினார். அதில் முக்கியமான ஸாக்ஷி ஜெகநாதநாயுடுவும், அவரது குமாஸ்தா ஸ்ரீநிவாஸப்பிள்ளையும்தான். இன்னும் மோட்டார் டிரைவரையும் ஒரு ஸாக்ஷியாகப் பதிவுசெய்து கொண்டனர். ரங்கபாஷியம் நாயுடுவுக்குக் காபி கொடுப்பதற்காக, கையில் காபியுடனும் மேல்மாடிக்கு வந்த ரங்கபாஷியம் நாயுடுவின் வேலைக்காரன்,—'எஜமானவர்கள் டெலிபோன் மூலமாக மோட்டாரை உடனே கொண்டுவரும்படியும், ஒரு டம்ளர் காபி வேண்டுமென்றும் தெரிவித்தாரென்பதாகவும், தான் தனது எஜமானருக்குச் சொந்தமான மோட்டாரை உடனே கொண்டுவரும்படி சுண்ணும்புக்காரத்தெருவிலுள்ள அவரது மோர்ட்டார் ஓட்டுபவனுக்குத் தான் தெரிவித்து விட்டு வந்திருப்பதாகவும் கூறினான். இன்ஸ்பெக்டர் எல்லோருடைய ஸாக்ஷியங்களையும் பதிவுசெய்துகொண்டார். ரங்கபாஷியம் நாயுடுவின் கைகளுக்கு விலங்கிட்டு, அவரைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோயினர்.

போலீஸின் ஸக்தியே ஸக்தி! நாம் திருடர்களுக்குப் பயப்படுகிறோம். திருடர்களோ தாங்கள் அகப்பட்டுக்கொ கொண்டால் என்ன செய்கிறதென்றும், போலீஸார் வசமாக வேண்டுமே என்றும் அச்சமடைகின்றனர். அவர்களுக்கு இருக்கும் அந்த நடுக்கமே நம்மை யவர்களின் துன்பத்திலிருந்தும் விடுவித்து நிம்மதியாய் வாழ வைத்திருக்கின்றது. கள்வன் என்ற மாத்திரத்தில் நடுங்குகிறோம்!— அவர்களை எதிர்க்கப் பின்வாங்கியல்ல—அதற்குத் தைரியமில்லாமலுமன்று; அவர்கள் கையில் ஏதேனும் ஆயுதம் இருந்து நமது உயிருக்கே ஆபத்து நேரிடுவதாயிருந்தால் என்ன செய்கிறதென்றுதான்—முன்வைத்த காலைக் கொஞ்சம் பின்வைக்க வேண்டியிருக்கிறது. இது போக, சில பிரபுக்கள்—பெரிய

மனிதர்கள்—இப்படிப்பட்டவர்களின் வீடுகளில் அவர்களே விதிவசத்தால் கொலைஞர்களாகவும், கொள்ளை யடித்தவர்களாகவும், மற்றும் பல குற்றங்களுக்கு ஆஸ்பதமானவர்களாகவும் ஏற்பட்டு—அல்லது பிறரால் கற்பிக்கப்பட்டு—அந்தோ காராக்கிருகத்திற்கு ஆளாகின்றார்கள். பலமுறை ஜாதகங்கள் திருப்பித் திருப்பிப் பார்த்திருந்தாலும், ஜோஸ்யன் உண்மையைக்கூறப் பின்வாங்கி—ஒருவனுக்குக் காராக்கிரகதோஷம் இருந்தாலும் அதை மூடிவைத்து நல்லதையே தெரிவித்து முடித்துவிடுகிறான். ஸ்ரீராமர் வனவாசத்திற்குச் செல்வாரெனத் தமக்குத் தெரிந்திருந்தும், அவரது பட்டாபிஷேகத்திற்கு முகூர்த்த நாள் வைத்துக்கொடுத்தாரன்றோ வஷிஷ்டர்! கடைசியாகப் பிரேமநாதனின் சவம் பரிசோதனார்த்தமாக திரிச்சினாப்பள்ளி முனிசிபல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டது. கொலை நடந்த இடத்தைப் பூட்டித் திறவுகோலை இன்ஸ்பெக்டர் தமது வசத்தில் வைத்துக்கொண்டார்.

திரிச்சினாப்பள்ளியில் ரங்கபாஷியம் நாயுடு மிகவும் பிரபலஸ்தரானதால், அவர் கொலைக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறாரென்ற செய்தி வெளிப்படவும், பட்டண முற்றிலுமே கொல்லென்றாய்விட்டது. கூட்டங் கூட்டமாக ஜனங்கள் திரண்டு போலீஸ் ஸ்டேஷனில் அவரைப் பார்க்கப் போனார்கள். எவ்வளவு வைபவமாக வாழ்ந்தபோதிலும், அந்த நேரம் குறுக்கிட்டுக்கொண்டால், எத்தகையோரும் தங்களைத்தாமே அறியாமல் சித்தப்பிரமை கொண்டு குற்றச்செயல்கட்கு உள்ளாகி விடுகின்றார்கள். அவர்கள் எவ்வளவு தூரமான இடங்களிலிருந்தபோதிலும், அந்த சமய மட்டும் ஒத்துக்கொண்டுவிட்டால், அவற்றை யநுபவிப்பதற்கு எப்படியாவது வெகு ஸமீபத்தில் வந்து நெருங்கிக்கொள்கிறார்கள். வண்டி முத

வியவைகள் கிடைக்கக்கூடாத நேரமா யிருந்தபோதிலுங் கூட—அந்த சமயத்தில் அவர்களுக்கென்றே வேகமாய்ச் செல்லக் கூடிய ஒரு தனி வண்டி அகப்பட்டு விடுகிறதும், இவர்களும் அந்த சமயம் பிசகிப் போகாதபடி வந்து குற்றங் கட்குப் பாத்திரர்களாகி விடுவதும் ஆச்சரியமே!

நிற்க, ஆஸ்பத்திரியில் பிரேமநாதனின் சவம் அன்றிரவே பரிசோதிக்கப்படவேண்டி யிருந்தது. அங்கு ஒரு டாக்டர் மட்டுமே இருந்தார். அவருடைய வீடும் அங்குதான்; அவருடைய உதவிக்காக ஒரு சேவகனும் அவ்விடத்தில் இருந்தான். ஆனல் அவனுக்கோ பலமான நித்திரை! அதிலும் அவன் சற்றுநேரத்திற்கு முன்புதான், கஞ்சாப் புகையை இழுத்திருந்தான். மணியோ ஒன்பது அடித்து விட்டது. டாக்டர் சவத்தைப் பரிசோதித்துவிட்டு "இனி வயிற்றை அறுத்துப் பார்க்கவேண்டும்" என்று கூறிக் கொண்டு, அதற்கான கருவிகளை எடுத்து வருவதற்காக அடுத்த அறைக்குட் சென்றார். திரும்பிவந்து ஸவத்தைப் பார்க்கையில் முன் இருந்த இடத்தில் அதைக் காணேம்! அதே நிமிஷத்தில் ஒரு வெடி சப்தமும், பெண்ணின் குரலோசை போன்ற தொனியும் உண்டாயின. நித்திரையிலிருந்த சேவகனும் திடுக்கிட்டான். உடனே டாக்டர் வெடிச் சப்தம் உண்டான இடத்திற்கு சேவகனேடு ஓடினர். அங்கே ஒரு பெண் சுடப்பட்டுக் கிடந்தாள். அதைப் பார்த்ததும் சேவகன் "அவள் என் மனைவி" என்று கதறினன். டாக்டர் ஒன்றுமே சொன்ருமல் பிரமித்து நின்றார்.

அத்தியாயம்—2

இருவர் நட்பும் ஸம்சயமும்

“எப்படி அதற்குள் தங்களுக்குக் கிடைத்தது? தந்தி கல்கத்தாவுக் கன்றோ அனுப்பினேன்?”

“ஒரு மணிக்கு முன் தான் கல்கத்தாவுக்குத் தந்தி கொடுத்தேனென்று நீங்கள் சொல்வது எவ்வளவுக்கு உண்மையோ,—அவ்வளவுக்கு உண்மையே—நான் அத்தந்தியைப் பார்த்துப் புறப்பட்டேனென்பதுவும்.”

“தங்களோடு ஸமத்வமாய் நின்று தர்க்கிக்க நான் அவ்வளவுக்கு ஸக்திவந்தனன்று. விவரித்துச் சொல்லவேண்டும்.”

“தங்களுடைய பணியாள் என்னிடத்திலேயே தந்தியைக்கொண்டு வந்து கொடுத்தான். அதைக் கண்டதும் தங்களிடத்திற்கு வருவதானேன்.”

“ஆனால் எனது வேலைக்காரனுக்குத் தங்களை இன்னாரென்று ஏற்கெனவே தெரியுமோ? அவ்வாறாயின் தபாலாபீஸ் ரசீது பொய்யா? கல்கத்தாவுக்குத் தந்தியனுப்பி விட்டதாக என்னிடம் கூறினானே?”

“அவன் தெரிவித்ததிலும் தவறு இல்லை. என்னையே தந்தியாபீஸரென்று கருதி என்னிடம் தங்கள் தந்தியை ஒப்புவிக்க, நானும் வழக்கம்போல் தந்தியை யனுப்பிவிட்டு ரசீதும் தரலானேன்.”

“அவ்வாறாயின் இப்போது தங்கட்குத் தபாலாபீஸிலா உத்தியோகம்?”

"நன்ருகச் சொன்னீர்கள். உத்தியோகம்—ஆகா! எவ்வளவு கௌரவமான பதம்? நாள் ஒன்றுக்கு நூறு நூருகப் பையைக்கட்டும் வியாபாரிக்குக் கடைக்காரன் என்று பெயர். ஒரு பத்து ரூபாய் சம்பளத்தில் தபாலாபீஸிலோ—ரெயிலிலோ—இருந்துவிட்டால் அதற்கு உத்தியோகம் என்று பெயர் போலிருக்கிறது! உங்களுடைய மகனுக்கு என்ன வேலை என்ருல்—"ரெயிலில் உத்தியோகம்—கச்சேரியில் உத்தியோகம்—தபாலாபீஸில் என்று சொல்லக்கூடாதாம்; போஸ்டாபீஸ் என்று கூறவேண்டுமாம்; கோர்ட் என்று கூற வேண்டுமாம்; அங்கே உத்தியோகம் இங்கே—உத்தியோகம் என்று பெருமையாய்ப் பதில் கூறிப் பெண் கேட்க வருகிருர்கள். சம்பளம் என்னவென்ருலோ பத்துரூபாய், பதினைந்து ரூபாய் என்பார்கள். ஐயோ வெட்கக்கேடே! பத்துரூபாய் உத்தியோக (!) த்துக்குச் செல்பவனின் உடுப்பைக் கவனித்தால் பதினைந்து ரூபாய் பெறக்கூடியதாயிருக்கிறது. தங்குவதற்கு ஒரு சொந்த வீடு கூட இராது. நிலபலமும் இருக்காது. ஆயினும், வெளிக்கு எல்லாம் வெள்ளையும் சள்ளையும் தான்! உள்ளுக்குப் பார்த்தா லல்லவோ தெரியும்—அத்திப் பழத்தை பிட்டுப் பார்த்தால் அத்தனையும் சொத்தைதான். இந்த லக்ஷணத்தில் மேல்வருமானம் பத்தெட்டு கிடைக்குமென்று சொல்லிக்கொள்ளும் கௌரவங்களும் வேறே! மேல்வரும்படி சம்பாதிப்பதில் அகப்பட்டுக் கொண்டால் தெரியும்—அப்போது படும்பாடு!"

"எங்களுக்கு மேல் வருமானம் இல்லாவிட்டால் நாங்கள் பெறுகிற சம்பளம் மூக்குப்பொடிக்குக்கூடக் கட்டாது. ரகசியத்திலல்ல—பகிரங்கமாகவே பெறுகிருேம். நாங்கள் ஏன் அகப்பட்டுக் கொள்கிறதில்லை?"

"நீங்கள் டாக்டர்கள்; உங்கள் உத்தியோகத்தோடும்

வெளியிலும் பலருக்கு உதவியாயிருந்து பிணி தீர்த்து வெகுமானங்கள் பெறலாம். வைத்தியர், உபாத்தியாயர் முதலானோரின் உழைப்பில் அவர்கள் சன்மானங்கள் பெற்றால் அதை லஞ்சமாகக் கருதுவதில்லை. அவர்கள் உலகத்திற்கு உபகாரிகளாவார்கள்."

"அது இருக்கட்டும். தாங்கள் தபாலாபீஸில் அமர்ந்தது எதற்காக?"

"அதுவும் ஒரு காரணார்த்தமாகத்தான். எல்லா வேடமும் போட்டுத்தானே தீரவேண்டும். உரலில் அகப்பட்டுக் கொண்ட பிறகு உலக்கைக்குப் பயந்தால் முடிகிறதா?"

"அப்படியானால், நீங்கள் இப்போது ஒரு கேஸின் பேரில் இங்கு வந்திருப்பதாக நான் பாவிக்கலாமா?"

"ஆஹா! தாராளமாக;— அந்தக் கேஸும் வெகு விசித்திரமாகத்தான் இருக்கிறது."

"அப்படி என்ன விசேஷம்?"

"பம்பாயிலிருந்து பெயர் ஊர் தெரிவியாமல் ஒருவர் எனக்கு ஒரு தந்தி யனுப்பி "என்னை ஸர்வ ஜாக்கிரதையாகக் காத்தற்பொருட்டு நீங்கள் திரிச்சிராப்பள்ளியில் இருக்க வேண்டும்" என்று கண்டிருந்தார். அவ்விதம் தந்தி விடுத்தவர் என்னிலும் சாதுரியவானாக இருக்கவேண்டும். உடனே புறப்பட முடியாததால் நான் இங்கு வந்து நான்கு நாட்களாகின்றன."

"தந்தி எப்பொழுது கிடைத்தது? நீங்கள் புறப்பட்டது என்றையதினம்?"

"ஏப்ரல் மாதம் 17-ம் தேதி கிடைத்தது. அந்த சமயம் எங்கள் குடும்பத்தில் ஒரு பெரிய கலகம். எங்களில் உறவினரான ஒருவர் லண்டனுக்குப் போய் வந்ததற்காக அவர் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டுமென்று பந்

துக்கள் கலகம் செய்தனர். சாஸ்திரங்களில் பிராயச்சித்தங்கள் செய்தல் வேண்டுமென்று விதி பல இருப்பினும், அவையும், பிச்சைக்காரர்கள் பிடுங்கித் தின்பதைப் போன்று சோம்பேறிகளாய்த் திரியும் பிராமணர்கட்கும் குருக்கள்மார்கட்கும் விலாப்புடைக்க அன்னமளிப்பதும் பொருள் மிகுதியும் கொடுப்பதுமாமென்று சொல்லப்படுகிறது. இவ்வாறு செய்வதனால் ஒருவன் புரிந்த குற்றம் எவ்வாறு பரிகரிக்கப்படுகிறதோ தெரியவில்லை? இக்குருட்டு வழக்கத்தை,—கண்மூடித்தனமான இப்பிராயச்சித்தத்தை,— செய்யவேண்டியதில்லையென்று மறுப்பதற்காக நான் கல்கத்தாவில் இருக்க வேண்டியிருந்தபடியால் உடனே பிரயாணப்படக்கூடாமல் 27-ம் தேதிதான் புறப்படும்படி யாயிற்று.''

"தங்களுக்குத் தந்தி யனுப்பியவரைத் தெரிந்து கொண்டு விட்டீர்களா?''

"இன்னும் இல்லை. அந்த விவரங்களின் துப்பு எதாவது கிடைக்கக் கூடுமென்றுதான், போஸ்டல் சூப்பிரண்டெண்டிடம் சென்று, என்னை இன்னாரென்று தெரிவித்து, நான் எந்தெந்தத் தபாலாபீஸ்களைச் சோதிக்க விரும்புகிறேனோ, அந்தந்த ஆபீஸ்களிலெல்லாம் என்னை வேலைக்கு அமரும்படி செய்து, மற்றவர்கள் என்னை ஒரு சாதாரணமான தபாலாபீஸ் குமாஸ்தாவைப்போலக் கருதிக் கொள்ளும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அந்த ஏற்பாட்டின்படி தந்தியடிக்கும் குமாஸ்தாவாக சென்ற இரண்டு தினங்களாய்க் கோட்டைப்போஸ்டாபீஸில் வேலைக்கமர்ந்து யாதாயினும் உளவு கிடைக்குமா வென்று ஆராய்ந்துகொண்டிருக்கிறேன்.''

"தந்தி யனுப்பியவரைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?''

" துப்பறிபவர்கட்குத் தந்தி யனுப்பிவிட்டுப் புறப்படுகிற யூகம் எல்லோருக்குமே ஏற்படாது. அவர் ஒரு கௌரவமான மனிதராகத்தான் இருக்கவேண்டும். தன் பெயரைக் குறிப்பிடாமல் தந்தி யனுப்பியதிலிருந்து—அவரை ஒரு மௌடீகம் என்று சொல்வதைவிட, எனது துப்பறியுந் திறத்தை யுணர்தற்கே அப்படிச் செய்திருக்கிறரென்று கூறுவது மிகுதியும் பொருத்தமுள்ளதாகும். ஆனல் நான் இன்னும் அவரைச் சந்தித்துக் கொள்ளாததால் இப்போது அவர் ஏதேனும் அபாயத்திற்குட்பட்டவராக வேண்டும்."

" அதை நீங்கள் என்னவித காரணத்தால் அப்படி ஊகிக்கிறீர்கள்?"

" அவ்வளவு பாதுகாப்புக்கு உட்படவேண்டியவராக அவர் கட்டாயப்படுத்தப்பட்டா லொழிய,—தான் சந்திக்கப் போகிறவர்களிடத்தில் தனக்கு ஒருவிதமான ஸம்சயம் தோன்றிக்கொண்டிருந்தா லொழிய, அனுவசியமாக எனக்குத் தந்தி யனுப்புவதற்குக் காரணமில்லையே?"

" உங்களுக்கு இருக்கும் இந்த வேலையோடு, எனக்கும் நீங்கள் உபகாரியாயிருக்கத் தற்போது ஸந்தர்ப்பப்படுமா? அதற்காகத்தான் கல்கத்தாவுக்குத் தங்கள் பேருக்குத் தந்தியும் இன்று அனுப்பினேன்."

" தங்களுடைய கேஸைச் சொல்லுங்கள்; கேட்கிறேன்."

" எனது பரிசோதனைக்கு வந்த சவம் ஒன்று மறைக்கப்பட்டிருக்கிறது. மறைக்க முயன்ற அதே நிமிஷத்தில் ஒரு ஸ்திரீ சுடப்பட்டுப் போனுள். இவ்வளவும் நான் அடுத்த அறைக்குட் சென்று பிரேத சோதனைக் குரிய கருவிகளை எடுத்துக்கொண்டு திரும்புவதற்குள்,—ஒரு கால்மணி நேரத்திற்குள்ளாக,—நடந்தேறிவிட்டன."

"காணமற்போன பிரேதத்தின்மீது ஏதேனும் நாற்றம் தென்பட்டதா?"

"அது எப்படி சாத்தியம்? மாலையில் தான் அவன் கொல்லப்பட்டான். அன்றிரவு ஏழு மணிக்கு எனது பரிசோதனைக்குக் கொண்டு வரப்பட்டது. அடிபட்டு இறந்தானென்று கேஸ்."—

"இந்தவிஷயத்தில் எனக்குள்ளாக ஒருவிதமான அபிப்பிராயம் தோன்றுகிறது. அதைப் பிறகு தெரிவிக்கிறேன். மற்றபடி அந்த ஸ்திரீ சுடப்பட்ட இடத்தில் வேறு ஏதேனும் குறிகள் தென்பட்டனவோ?"

"அந்த ஸ்திரீ தன் கணவனுக்கென்று கொண்டுவந்த சாதம் சிதறிக்கிடந்ததைத் தவிர வேறு ஒன்றும் காணப்படவில்லை. போலீஸார்நாற்புறங்களிலும் ஓடித்தேடியும் வியர்த்தமாயிற்று. கடைசியாக ஸம்சயம் என் மீதே திரும்பியிருக்கிறது."

"எப்படி? அதைக் கற்பித்தது யார்?—போலீஸாரா?"

"இல்லை. ஜெகனாத நாயுடுவும் ஸ்ரீநிவாஸபிள்ளையும் இப்போது எனக்கு எதிரிகளாகத் தோன்றியிருக்கிறார்கள். சவத்தை நானே ஒரு வண்டியில் வைத்து அனுப்பிவிட்டேனென்றும், சுடப்பட்டுப்போன ஸ்திரீ அதைப் பார்த்துவிட்டதால், அவளை நான் உடனே சுட்டுவிட்டதாகவும் மேற்கண்ட இருவரும் கற்பனை செய்திருக்கிறார்கள்."

"நீங்கள் இவ்விதம் நடத்தினீர்களென்று அவர்கள் உணர்ந்தது எப்படி?"

"சுடப்பட்டுப்போன ஸ்திரீ, நான் வண்டியில் சவத்தை ஏற்றி யனுப்பியதாக அவர்களுக்குத் தெரிவித்து, மறுபடியும் ஆஸ்பத்திரிக்குத் திரும்பியதாகவும், பிறகு அந்தப் பெண் ஆஸ்பத்திரியின் எல்லைக்குள்ளாகவே சுடப்பட்டுக்

கிடந்ததால்,—நான் சவத்தை மறைத்துவிட்டேனென்பதை அவள் அறிந்துவிட்டாளென்று நான் தெரிந்துகொண்டதும், இது வெளியிற் பரவாதபடி அவளைத் தக்ஷணமே நான் சுட்டு விட்டு, பிறர் சுட்டதுபோன்று அபிநயித்திருக்கவேண்டு மென்றும்—ஜெகநாத நாயுடுவும், ஸ்ரீநிவாஸ பிள்ளையும் ஊகிக்கிறார்கள்.''

"இந்த ஜெகநாதநாயுடு, ஸ்ரீநிவாஸபிள்ளை என்பவர் கள் யார்?"

"ஜெகநாதநாயுடு ஒரு பெரிய பணக்காரர். ஸ்ரீநிவாசப் பிள்ளை அவரது குமாஸ்தா. ஊர் சங்கதிகளைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பது தான் இவர்களுக்கு வேலை. சுகவாசிகட்கு இலகுவில் பொழுது போகமாட்டேனென்கிறது. அதற்காக அவர்கள் ஊர்—வம்பையாவது, சீட்டுக்கட்டையாவது எடுத் துக்கொண்டு காலம்போக்குவது வழக்கந்தானே! அதில் ஜெகநாதநாயுடுவும் ஒருவர். ஸ்ரீநிவாஸ பிள்ளையோ எஜ மானனுக்கேற்ற பணியாள்."

"போலீஸின் அபிப்பிராயம் எப்படி இருக்கிறது?"

"மேற்சொன்ன இருவரின் ஊகிப்பே பொருத்தமாய் இருக்கலாமென்று அவர்களும் நம்புகிறார்கள். நான் இப் போது ஜாமீன்மீது விடுவிக்கப்பட்டிருக்கிறேன். தாங்கள் இதைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல முடியுமா?"

"கேஸ் எப்படிப் போகிறதோ! நான் இப்போது சொல்வதெப்படி? தாங்கள் சவத்தைக் கண்டுபிடிக்கவேண்டு மென்று என்னைத் தருவித்தீர்கள். இப்படி ஒரு துப்பறிய வரை ஏற்படுத்திக் குற்றத்தை வெளிக்குக் கொண்டு வரும் படிக் கேட்டுக்கொள்கிறவர்களே—அநேக சமயங்களில் உண் மையான குற்றவாளிகளாக முடிகின்றார்கள். இறுதியில் தங் களின் குற்றத்தை ஒப்புக்கொண்டும் விடுகின்றார்கள். இப்படி

அவர்கள் தாங்களே குற்றத்தை வெளிப்படுத்துவதற்கு நிரம் பவும் பிரயாசை எடுத்துக்கொண்டதாகப் புலப்படுத்து வித்து, அதிலிருந்து தங்களை நிரபராதிகளென்று ஜனங்கள் கருதும்படி கேஸை வெகு அழகாக ஜோடினைசெய்து விடு கிறார்கள். லண்டனில் ஒரு பிரபுவின் மீது ஒருவன் மறைவி லிருந்து வெடிகுண்டை யெறிந்து விட்டு, அப்பிரபுக்காக அநுதாபக்கூட்டம் கூடியபோது தானே அதற்கு அக்கிரா ஸனுதிபதியாக இருந்து மகா அநுதாபத்துடனும் பேச்சு களைக் கொட்டினான். இது எவ்வளவு மோசமான சூழ்ச்சி ? திருடினவன்—'ஸ்வாமி! எனக்கு உம்முடைய கிருபையால் இந்த நகை அகப்பட்டது; எவரிடமும் சிக்கிக்கொள்ளாமல் சுகமே வீடு போய்ச் சேரவேண்டும்'—என்று பிரார்த்திக்கி ருன். அந்நகையை இழந்தவனும்—அது எப்படியாவது அகப் பட்டுவிடவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறான்."

"அப்படியானால், என்மீது தங்களுக்கு சம்சயம் தோன்றுகிறதா ?"

"நான் எப்படிச் சொல்லமுடியும்? ரங்கபாஷியம்நாயுடு வும் நீங்களும் ஒருசாலை மாணவர்களாகவும், பள்ளிக்கூடத்து நேசர்களாகவும் இருந்து—இப்போதும் அந்த அன்னி யோன்னியம் மறவாதவர்களாய் நடந்துகொண்டு வருகின் றீர்களல்லவா ?"

"நாங்கள் பரஸ்பரம் நண்பர்களென்பதைத் தாங்கள் எப்படி அறிந்தீர்கள் ?"

"ரங்கபாஷியம்நாயுடுவைப் பார்க்க நான் சிறைச்சாலைக் குட் சென்றபோது அவர் உங்களுடைய பெயரைக்கூறி— 'ராமநாதா! உனக்குக் கைநிரம்ப பெப்பர்மிட் தருகிறேன், நான் வீட்டில் இல்லையென்று உபாத்தியாயருக்குத் தெரி வித்துவிடு—என்று தமது பைத்தியப்பேச்சுகளால் பிதற்

றிக்கொண்டிருந்தார். அதிலிருந்து ராமநாதர் யாரென்று அறிய எண்ணினேன். அவருடைய வயதிற்கு நீங்களும் ஒத்திருந்ததன்றி ஒரே ஊராகவும் ஒரே தெருவாகவும் இருந்ததால், உங்களைப்பற்றித் தான் கூறினாரோ—அதைத் தெரிந்துகொள்ளலாமென்று மேற்கண்டபடி உங்களைக் கேட்டேன்."

"சரி, நாங்கள் இருவரும் பள்ளித்தோழர்கள்தாம். அதற்கும் சவம் காணாமற்போனதற்கும் என்ன சம்பந்தம்?"

"பிரேமநாதனைக் கொன்றவர் ரங்கபாஷியம் நாயுடு. இப்போது சவம் மறைக்கப்பட்டுப்போய் பிரேதபரிசோதனை தவறிவிட்டபடியால், கேஸை ரங்கபாஷியம் நாயுடுவுக்கு ஸாதகமாக எப்படி வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளலாமன்றோ?"

"அவ்வாறாக மாற்றுதற்கு உதவியா யிருக்கும்படி நான் நேசத்தன்மையால் பாதிக்கப்பட்டு சவத்தை மறைத்துவிட்டேனென்று — அபிப்பிராயம் ஏற்படலாமென்பதாகத் தாங்கள் சொல்லுகிறீர்களா?"

"அது மட்டுமேயல்ல; சுடப்பட்டுப்போன ஸ்திரீ நீங்கள் சவத்தை வண்டியிலேற்றி அனுப்பிவிட்டதைப் பார்த்துவிட்டு, ஆஸ்பத்திரிக்கு எதிரில் உள்ள கடையிலிருந்த ஜெகநாத நாயுடுவுக்குச் சொல்வதற்காகச் சென்றபொழுது, தாங்கள் அவளை அப்போது பார்க்கவில்லையென்றும், பிறகு அவள் திரும்பி வரவும், சவம் ஏற்றிய வண்டி அதே சமயத்தில் செல்லவும் கண்டு, உடனே நீங்களும் அவளைப் பார்த்துத் திடுக்கிட்டுக் கைத்துப்பாக்கியால் அவளைக் கொன்றிருக்க வேண்டுமென்றும் அநுமானம் ஏற்படுகின்றது. உங்களுக்கும் ரங்கபாஷியம் நாயுடுவுக்குமுள்ள நட்பின் பெருக்கால் இந்த அநுமானம் பின்னும் உறுதியை யடைகின்றது."

"அவ்வாருனல் தங்களுக்குக்கூட என்மீது சம்சயம் உண்டாகிறதுபோலிருக்கிறது. வாஸ்தவமாகவே குற்றவாளிகளாயிருப்பவர்கள் வக்கீல்களின் வாக்கு சாமர்த்தியங்களாலும், ஹைகோர்ட், பிரிவிகவுன்ஸில் முதலியவைகள் வரையும் சென்று அப்பீல்கள் செய்துகொள்வதாலும் தண்டனைக்கு விலகித் தப்பித்துக் கொண்டுவிடுகிறார்கள். ஆனல் நிரபராதியோ அவனது காலவசத்தால் எப்படியோ ஒரு கேஸில் சிக்கிக்கொண்டுவிட்டால் அதிலிருந்தும் அவன் மீட்கப்படுவது இரண்டாம் பட்சமாக—சந்தேகமாக—முடிந்துவிடுகிறது."

"நான் யார் மீதும் சந்தேகிக்கவில்லை. ஆனல் எவரையும் நான் பரிசுத்தமானவர்களென்று சொல்லிவிடமுடியாது."

"அது அப்படி இருக்கட்டும், சவம் மறைக்கப்பட்டுப் போனதின் சம்பந்தமான கேஸைக் கண்டுபிடிக்கத் தாங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா?"

"நாளைமுதல் அந்த வேலையை எடுத்துக் கொள்கிறேன். ஆயினும் உங்கள் "இருவர்நட்பும் ஸம்சயமும்" கேஸுக்கு நிரம்பவும் பொருத்தமுடையதா யிருப்பதால், கேஸ் எப்படித் திரும்புமோ இப்போதொன்றும் நான் சொல்லமுடியாது."

"ஸஞ்சீவபாபு அவர்களே! உங்களுக்கு வெற்றி யுண்டாகட்டும்"

என்று இராமநாதமுதலியார் அவருக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு ஆயாசத்துடனும் தமது அறைக்குட் சென்றார்.

அத்தியாயம்—3

ஒரு சிக்கலான கேஸ்.

இந்த ஆச்சரியகரமான கேஸில் ஸஞ்சீவசந்திரபாபுவின் துப்பறியுந் திறமை பெரிதும் அதிசயிக்கற்பாலது. அவர் திரிச்சினாப்பள்ளிக்கு வந்ததும் ரங்கபாஷியம் நாயுடுவின் விசித்திரமான கொலைக் கேஸைப் பற்றிக் கேள்விப்பட்டார். பிறகு அக்கேஸில் சம்பந்தப்பட்டுள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர் நரஸிம்மராவைக்கண்டு பல விவரங்களையும் தெரிந்துகொண்டார். பிறகு ரங்கபாஷியம் நாயுடுவைச் சிறைச்சாலைக்குட் சென்றும் பார்த்தார். அவர் எதற்குமே விடைதராமல் தன்பாட்டில் பிதற்றிக்கொண்டிருத்தலையும் நோக்கினார். அந்தப் பைத்தியப் பேச்சுகளிலிருந்து இராமநாத முதலியாரின் பெயரையறிந்து, அவர் இன்னாரென்பதையும் சாதுரியத்துடனும் கிரகித்துக்கொண்டார். இராமநாத முதலியார் இக்கேஸின் ஸம்பந்தமாகத் தம்மைத் துப்பறியும்படி கேட்டுக்கொண்டதின்மேல் அவரிடமிருந்து விடைபெற்று இனிஸ்பெக்டர் நரஸிம்மராவின் வீட்டிற்குச் சென்று அவரை அழைத்துக்கொண்டு மோட்டாரில் ஏறி மணியக்காரத்தெருவில் உள்ள

பிரேமநாதன் கொலையுண்ட வீட்டிற்குச் சென்றார். கொலை நிகழ்ந்த ஸ்தலத்தைச் சோதிக்கவேண்டுமென்று, வாயிற்படியில் நின்றுகொண்டிருந்த ஜெகநாத நாயுடுவுக்குத் தெரிவிக்க அவரும் இவர்களோடு மாடிக்கு வர, இன்ஸ்பெக்டர் தம்மிடமிருந்த சாவியால் மாடியின் கதவைத்திறந்து ஸகலமும் ஸஞ்சீவபாபு பார்க்கும்படி செய்தார். ரங்கபாஷியம் நாயுடுவைக் கைதி செய்த பிறகு அந்த மாடியைப் பூட்டி இன்ஸ்பெக்டர் அந்த சாவியைத் தமது வசத்தில் வைத்துக் கொண்டாரென்பதை முதல் அத்தியாயக் கடைசியில் விவரித்திருக்கிறோம்.



மாடியின் வலது பக்கம் ஒரு அறையும், இடது பக்கம் ஒரு அறையும், எதிர் பக்கம் ஒரு நீளமான அறையும், அந்த அறைக்குள் ஒரு மூலையில் ஒரு சிறு அறையும், இந்தப் பெரிய மூன்று அறைகளுக்கு மத்தியில் ஒரு கூடமும் இருந்தன. ஸஞ்சீவபாவு அவைகள் இருந்த விதத்தைத் தமது கைப் புஸ்தகத்தில், மேலே கண்டவாறு கோடு இழுத்துக் குறிப்பிட்டுக் கொண்டார். பிறகு இன்ஸ்பெக்டரைப் பார்த்து

"தாங்கள் ரங்கபாஷியம் நாயுடுவை அரஸ்ட் செய்கையில் அவர் எந்த அறையில் இருந்தார்?"—என்று வினவினார்.

இன்ஸ்பெக்டர். — "எதிரில் காணப்படுகிற நீளமான அறைக்குள் ஒரு மூலையிலிருக்கிற சிற்றறையில் நாற்காலி

யொன்றின்மீது சாய்ந்தவண்ணம் கையில் ஒரு முகக்கண்ணாடியுடனும் தம்மைத்தாமே பார்த்துப் பேசியவாறு இருந்தார்.''

ஸஞ்சீவபாபு.—"அவர் அப்போது தரித்திருந்த பெண் வேடம் பிறருடைய பார்வைக்கு எப்படி யிருந்தது?"

இன்ஸ்பெக்டர்.—"ஒரு பருவமங்கையின் எழிலுக்குச் சற்றும் குறைவில்லாத விதமாக அவர் விளங்கினர். ஏற்கெனவே அவரைப் பார்த்திருப்பவர்கள்கூட அப்பொழுது அவரைக் கண்டறிவதற்கு முடியாத விதமாக அவரதுவேடம் ஸம்பூர்ணமாக யிருந்தது."

ஸஞ்சீவபாபு.—"எனது கேள்வி அஃதன்று; அவர் தரித்தவேடம்—அது ஒரு பெண்வேடம் என்று கருதும்படி இருந்ததா? அல்லது வேடம் என்று பிறர் சந்தேகிப்பதற்கே இடமின்றி, இயற்கையிலேயே ஒரு ஸ்திரீயின் உருவத்திற்குப் பொருத்தமானதாய்—அது ஒரு பெண்தான்—என்று சொல்லி விடும்படியாக இருந்ததா?"

இன்ஸ்பெக்டர்.—"நான் அவரை ஒரு பெண்ணென்று கருதுவதற்கான அவ்வளவு சாவதானத்திற்கு இடம் தந்து கொள்ளவில்லை. ஆனதால் அவர் ஒரு பெண்வேடம் தரித்திருப்பதாகவே ஆரம்பத்திலேயே நான் எண்ணிவிட்டேன்."

ஸஞ்சீவபாபு.—"ஒரு விஷயத்தைப்பற்றி முதலில் நமக்குப் படுகிற அபிப்பிராயத்தைத்தானே நாம் முக்கியமாகக் கொள்ளவேண்டியிருக்கிறது?"

இன்ஸ்பெக்டர்.—"ஆம்; அந்த விஷயத்துக்கும் நமக்கும் யாதொரு சம்பந்தமு மில்லாதிருக்கிற ஆரம்பகாலத்தில்—அதுவிஷயமாக நாம் ஒரு உத்தேசம்—எண்ணம்—கொண்டால், அதை நாம் பெரும்பான்மையும் பாராட்டவேண்டியது தான்."

ஸஞ்சீவபாபு.—"சந்தோஷம்; தாங்கள் சொல்லுகிறவழியாகவே இந்தக் கேஸைக் கொண்டுபோய்ப் பார்ப்போம். ரங்கபாஷியம் நாயுடுவை அன்றையதினம் நீங்கள் பார்த்த மாத்திரத்திலேயே அது ஒரு பெண்வேடம் என்று தீர்மானித்துவிட்டதுபோலவே மற்றவர்களும் எண்ணுதல் ஸாத்தியந்தானென்று நீங்கள் நம்புகிறீர்களா?"

இன்ஸ்பெக்டர்.—"என்னைப் போலவே மற்றவர்களும் அது ஒரு பெண் வேடந்தானென்றே கூறுதல் கூடுமென்று எனக்குப் படுகிறது."

ஸஞ்சீவ.—"இப்படிப் பார்த்த மாத்திரத்தில்தானே பெண்வேடமென்று சொல்லிவிடக்கூடிய அவ்வளவு சுலபமாக அவ்வேடம் இருக்குமானால், அதைத் தான் தப்பித்துக் கொள்ளுவதற்கேற்றதான ஒரு உபாயமாகக் கொலையாளி ஒருவன் நினைத்துப் பூண்டுகொண்டானென்னல் எவ்வாறு பொருந்தும்?"

இன்ஸ்பெக்டர். — "தாங்கள் சொல்வதை இன்னும் சற்றே விவரித்துக் கூறவேண்டும்."

ஸஞ்சீவ.—"எப்போது அது வேடம் என்று பிறருக்குத் தோன்றுகிறதோ அதை,—தான் மறைந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிற ஒருவன்,—தான் தப்பித்துக் கொள்வதற்கான ஒரு பாதுகாப்பாக ஒருபோதும் கருதவேமாட்டான். அந்த வேடத்தால்—சாதாரண மனிதர்களின் கண்கள் கூடக் கூர்மைப் படுத்தப்பட்டு 'இந்த வேடக்காரன் யார்?' என்று பலரும் கவனிக்கும்படியாக ஆகிவிடுகிறபடியால், இவ்வேடம் புனைவதிலிருந்து தான் தப்புவதற்குப் பதிலாக அகப்பட்டுக்கொள்ளும்படியே நேருமென்பதை ஒரு பைத்தியக்காரன்கூட நன்றாக அறிந்திருப்பான்."

இன்ஸ்பெக்டர்.—"இதனால் அவாது பெண் வேடத்

தைக்கொண்டே அவரைக் குற்றவாளியென்று கூறிவிடுவது பொருந்தா தென்கிறீர்களா ?"

ஸஞ்சீவ.—" ஆம்; நீங்கள் "அவர் தரித்தது பெண் வேடம் என்றே என் மனதில்பட்டது—என்று சொல்கிறபடியால் மேற்சொன்ன தீர்மானத்துக்கு நான் வரவேண்டியவனாகிறேன்."

இன்ஸ்பெக்டர்.—" அந்த வேடம் இயற்கையிலேயே பெண் தான் என்று கூறும்வாறாக இருந்துவிட்டாலோ ?"

ஸஞ்சீவ.—" அப்போதுமட்டும் கொலைக்குற்றத்திற்கும் பெண்ணுருவிற்கும் சம்பந்த மேற்படுத்திக்கொண்டு கேஸை உட்புகுந்து ஆராய்ந்து பார்க்கலாம்."

இன்ஸ்பெக்டர்.—" ரங்கபாஷியம் நாயுடு தரித்தது 'வேடம் போன்று காணப்பட்டது' என்று நான் சொன்னது சரியான தீர்மானமல்ல. அவர் உருவம் வேடம் போன்று தான் காணப்பட்டதோ, அல்லது இயற்கையிலேயே பெண்ணாகவே தான் இருந்தாரோ—அதை நான் நிச்சயமாய்க்கூற எனக்கு ஸக்தி போதாதென்று இப்போது தான் தெரிகிறது."

ஸஞ்சீவ.—" முதலில் வேடம் போன்றிருந்தது—என்று கூறிவிட்டு, இப்போது தாங்கள் அந்த வார்த்தையையே முழுதும் மாற்றப் பார்க்கிறீர்களே ?"

இன்ஸ்பெக்டர்.—இதில் நான் ஏதுங் கிரமந்தப்பிவிடவில்லை. அவரது வேடத்தை நான் பார்ப்பதற்கு முன்னதாக,—நான் மெத்தைப்படி ஏறி சிற்றறைக்குள் வரும்போது,—'யானே இப்பெண்ணின் உருவம் என்று எவர் மனதிற்கேனும் படுமோ ?' என்று ரங்கபாஷியம் நாயுடு தனக்குத் தானாகவே பேசிக்கொண்டிருந்த வார்த்தையை நான் செவியாறக் கேட்டு விட்டேனாதலால், அவரைக் காண்ப

தன் முன்னரே, அவர் ஒரு பெண் வேடத்துடன் தான் இருக்கவேண்டுமென்று நான் நம்பிக்கொண்டு—இந்த உறுதியுடனேயே,—இந்த அபிப்பிராயத்துடனேயே,—சிற்றறைக்கு வெளியே இருந்து அவரை எட்டிப் பார்த்தபடியால்—'அவர் தரித்த பெண்ணுருவம் வேடம் போன்று தான் காணப்பட்டது' என்று நான் முன் அபிப்பிராயம் தெரிவித்தது கிரமமான அபிப்பிராயம் ஆகாதென்று வற்புறுத்த விரும்புகிறேன். யாதொரு விஷயமும் என் செவியிற்படாமல் திடீரென அவரைப் பார்த்து, அவ்விதம் பார்த்தளவில் என் மனதில் ஒரு அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தால்—அதைச் சரியென்றும், என்னுடைய அபிப்பிராயமே அது என்றும் ஸ்தாபிக்கப்படலாம். அப்படிப்பட்ட ஏதுகரம் இங்கு இல்லாமற் போய்விட்டது."

ஸஞ்சீவ.—"அப்படியானால், உங்களுடன் வந்திருந்த மற்றப் போலீஸாருடைய ஸாக்ஷியங்களால்—'அது வேடமா, அல்லது இயற்கைக்குப் பொருந்திய பெண்ணுருவந்தானா?' என்பதைப்பற்றி ஒரு ஆராய்ச்சி செய்து பார்க்கலாமா?"

இனிஸ்பெக்டர்.—"நான் எப்போது வேடம் என்று கருதிவிட்டேனோ, அப்போது என்னுடைய துணை உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் என் அபிப்பிராயமே அவர்கள் மனதிலும் பதிந்துபோயிருக்குமானதால், அவர்களுடைய ஸாக்ஷியங்களையும் இந்த விஷயத்தில் பொருட்படுத்தாமல் ஒதுக்கிவிடவேண்டும். ஒரு பெண்ணை எத்தனையோ தூரமான இடத்திலிருந்து ஒருவனுக்கு மனைவியாகக் கொண்டுவந்து விட்டபோதிலும், அந்தப் பெண் நமக்கு மிகவும் வேண்டியவளாயிருந்த போதிலும், நமக்குப் பிரியமான குடும்பத்திற் பிறந்து வளர்ந்தவளா யிருந்த போதிலும், அவளுக்குக் கணவனாக வந்தவன்—நமக்கு முற்றிலுமே

விரோதியாக இருப்பானாகில்—அப்பெண்ணின் கல்யாணத்தைக்கூட நாமே நடத்திவைத்து, அவளுக்குப் புதுவாழ்வு உண்டாகச் செய்திருந்தாலும்,—அவற்றையெல்லாம் அப்பெண் ஒருபோதும் கவனியாள்; தான் புஷ்பவதியாகிப் பத்து வருஷங்கள் வரையில் விவாகமின்றி வீட்டிலேயே கிடந்ததற்கு அவர்களாலல்லவா நமக்கு ஒரு விமோசனம் ஏற்பட்டு விவாகம் நடக்கும்படியாயிற்று என்பதையும் அவள் எண்ணி விசுவாசம் பாராட்டமாட்டாள்; தன்னுடைய புருஷன் அவர்களுக்கு முற்றிலும் விரோதியானதால், அந்தப் புருஷனைப்போலவே தானும் அவர்களுக்கு விரோதியாக மாறி அதற்கான கோள் குண்டுணித்தனங்களை யெல்லாம் தனது புருஷனைக்காட்டிலும் எண்மடங்காகச் செய்து—தனது புருஷனுக்கும் அவர்களுக்கும் இருந்த அற்ப சொற்ப உறவைக்கூட வெட்டி எறிந்து, முன்னிலும் அதிகமான விரோதம் சூழும்படி புரிந்து கணவன் மெச்சிய பெண்ணாய் விடுவாள். ஒரு ஸ்திரீயின் குணங்கள், அவள் வாழ்க்கைப் பட்ட கணவனின் போக்குகட்குத் தக்கபடி மாறிவிடுகின்றன. அவளையும் அவள் புருஷனையும் தூரத்திலிருந்து பார்க்கும் அன்னியனொருவன்கூட, இவர்கள் இருவரும் ஸதிபதிகளோ—அவளுடைய புருஷன் தானோ இவன்—என்று எண்ணும்படியான ஒருவித முகவொற்றுமையும் கூட அவர்களுக்குள் பொருந்தி விடுகின்றது. தான் அன்னிய இடத்திலிருந்து வந்து ஒருவனுக்கு மனைவியாய்விட் டிருந்தபோதிலும், அவனைப்போலவே—அவனது முகரூப நடையுடைபாவனைகள் அனைத்தும் பொருந்தும்படியான ஒரு குழந்தையை அவள் சுலபத்தில் பெற்றெடுத்து விடுகிறாள். புருஷன் கலகக்காரனாயிருந்தால், இவளும் கலகக்காரியாய், இல்லாததையெல்லாம் உண்டுபண்ணி, சொல்லாததையெல்லாம் அவர்

கள் இவர்கள் சொன்னார்களென்றே கற்பித்து, அபாண்ட மான பழி போட்டு, வார்த்தைகளை முடிந்து வம்பு—சண்டை கள் உண்டாகச் செய்து விடுகிறாள். புதிதாக ஒருவனுக்கு மனைவியாய் வந்த ஒரு பெண் பட்டித்தன முள்ளவளாய்ப் போவது அவள் புருஷனால் தான். அவர்கள் சங்கதி அப் படி, இவர்கள் சங்கதி இப்படி, அவர்கள் அந்தக்காலத் தில் அப்படியெல்லாம் செய்தார்கள், இப்படி யெல்லாம் செய்தார்கள் என்று இளக்காரமாய், படுக்கையறையில் கதவை மூடிக்கொண்டு எல்லா சங்கதிகளையும் தன் அபிப் பிராயத்தோடும் கலந்து மனைவிக்குச் சொல்லிக்கொடுக்கி றான். இந்த உபதேசங்களைப் பெற்ற அவள் மறுதினமே பந்துக்களை அலக்ஷியம் செய்யத் தொடங்கிக்கொள்கிறாள். பந்துக்களின்மீது தன் கணவனிடம் கோள் சொல்லிக் கலக மூட்டுவதற்கு—தனியாகத் தாள்ப்பாளிடப்பட்ட தன் கணவனோடு கூடிய பிரத்தியேகமான ஒரு கோட்டடி அவ ளுக்கு இருக்கிறதன்றோ? படுக்கையறை ஏற்பட்டது புத்திர பாக்கியம் பெற்றுக்கொள்வதற்காக அல்ல; புருஷனுக்குத் தலையணை மந்திரம் போடுவதற்காகத்தான். இவ்விதமாக மந் திரம் போடுவித்து, வேண்டியவர்கள் எல்லோரையுமே தன் கணவனுக்கு விரோதியாக்கி,—“கல்யாணமானதும் அவன் புதுவிதமாகப் பெரிய மனிதனாகிவிட் டிருக்கிறான்” என்று தன் புருஷனைப்பற்றி மற்றவர்கள் சொல்லும்படியா கச் செய்து அந்த விதத்தில் அவனைத் தயாராக்கிவிடுகிறாள். எப்படி இப்பெண் தனது புருஷனுடைய அபிப்பிராயங்களுக் குத் தக்கபடி மாறிப்போனாளோ அவ்விதமே, கீழ் உத்தி யோகஸ்தர்களும் தங்களின் தலைமை உத்தியோகஸ்தர்களு டைய போக்குகட்குத் தக்கவாறாக மாறி, அவர்களின் அபிப் பிராயங்களையே தங்களின் அபிப்பிராயங்களாகக் கொண்டு

விடுகிறார்கள். இந்த இடத்தில் கீழ் உத்தியோகஸ்தர்கள் மனைவியின் ஸ்தானத்திலும், தலைமை உத்தியோகஸ்தர்கள் புருஷனின் ஸ்தானத்திலுமாகக் காணப்பட்டு, புருஷன் மனைவிக்குச் சமமாக ஒருவர் அபிப்பிராயத்தையே மற்றவர்களும் கொண்டவர்களாகி விடுகிறார்கள். ஆனதால் தலைமை உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராயம் வேறாக இருக்கும்; அவர்களுடைய அபிப்பிராயத்துக்கு எதிரிடையாகக் கீழ் உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராய மிருக்கக்கூடும் என்று தாங்கள் கருதுவது இங்கு பொருந்தாது. நான் எப்போது வேடம் என்று முன்னதாகக் கருதிக்கொண்டேனோ, அப்படியே—அப்போதே என் கீழ் உத்தியோகஸ்தர்களும் எண்ணிக் கொண்டுவிட்டிருப்பார்கள். ஆதலின் அவர்களின் அபிப்பிராயத்தைத் தாங்கள் கவனிக்கவேண்டியதில்லை."

ஸஞ்சீவ.—"சரி, இந்த விஷயத்தைப்பற்றி குற்றவாளியை அன்று பெண்ணுருவுடன் பிடித்த பொட்டகிராப் கைக்கு வந்த பிறகு நமது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளலாம்."

இன்ஸ்பெக்டர்.—"தங்களுடைய யுக்தியான கேள்விகளுக்குப் பொட்டகிராப்பைக் கொண்டு பதில் சொல்வது சாத்தியமல்ல. அழகா யிருப்பவர்கள் பொட்டகிராப்பில் அவலக்ஷணமாகத் தோன்றுவதுமுண்டு. பார்ப்பதற்கே சகிக்கமுடியாத கோரமுடையவர்களும் பொட்டகிராப் பிடிப்போது சாமர்த்தியத்தால் வெகு அழகாகப் பொட்டகிராப்பில் தோன்றுவதுமுண்டு. சிலது பொட்டகிராப்புகளில் அதில் இருப்பது அவர்கள் தானோ என்று சம்சயிக்கும்படியாக முகத்தோற்றம் மாறுபடக் காண்பதுமுண்டு. ஆகவே பொட்டகிராப்பைக்கொண்டு இயற்கையிலேயே பெண்ணுருவமா—அல்லது வேடமா? என்று தீர்மானிப்பது கஷ்டம்."

ஸஞ்சீவ.—"அது கஷ்டமா அல்லவா என்பதைப்பற்றிப் பிறகு பார்த்துக்கொள்வோம். இங்கே ஒரு கொலை நடந்து விட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்ததெவ்வாறு?"

இன்ஸ்பெக்டர்.—"ஒரு சிறுவன் ஒரு கடிதத்துடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடிவந்தான். கடிதத்தில் 'மணியக்காரத்தெரு ராமவிலாஸத்தில் அபாயம். உடனே போலீஸ் உதவிவேண்டும்—பிரேமநாதன்' என்றிருந்தது. உடனே நான் விரைந்துவந்து மாடியின்மீது ஏறப்போகையில் ரங்கபாஷியம் நாயுடுவின் வார்த்தைகள் என் செவியிற்பட்டன."

ஸஞ்சீவ.—"அந்த வார்த்தைகள் இன்ன தென்பதைத் தங்களின் 'போலீஸ் குறிப்புகள்' மூலமாய்த் தெரிந்துகொண்டேன். அக்கடிதத்தைக் கொண்டுவந்த சிறுவன் யார்?"

இன்ஸ்பெக்டர்.—"அவனைத் தெரியாது; என்றாலும் பத்து வயதிருக்கும். திக்கித்திக்கிப் பேசினான். சிரித்தவண்ணமே காணப்பட்டான். நெற்றியில் ஒரு சிரங்கின் தழும்பு இருக்கும். கொஞ்சம் சிவப்பாகவும் ஒல்லியாகவும் இருப்பான். இளைத்த தேகம் உடையவன். வெகு வேகமாய் ஓடக்கூடியவன். என்னிடம் கடிதத்தைப் பிரேமநாதர் தரச் சொன்னாரென்று கூறிக் கொடுத்ததும் துரிதமாய் ஓடிவிட்டான். அப்படி அவன் என்னிடம் சொல்லும்போது திக்கித்திக்கிப் பேசினான். இரண்டு தடவை அவன் பேச வாயைத் திறந்தும் திக்கியதால் பேசமுடியாமல் மூன்றாவது தடவையாக வாயைத் திறந்து கழுத்தை வளைத்து வளைத்துப் பேசினான்."

ஸஞ்சீவ.—"நீங்கள் மாடியின்மீது ஏறுகையில் உங்களை எவரும் தடுக்கவில்லையா?"

இன்ஸ்பெக்டர்.—"நாங்கள் மாடியின்மீது ஏறிய பிறகு வேலைக்காரனொருவன் காபியுடன் வீட்டினுள்ளே யிருந்து

வெளியேவந்தான். அவனை மேலே வரவிடாதபடி ஒரு கான்ஸ்டேபிள் வெளியிலேயே நிறுத்திவிட்டு "காபி யாருக்கு?" என்று கேட்டதற்கு அவன் எஜமானருக்கு என்று சொன்னானும். எஜமானர் என்பது ரங்கபாஷியம் நாயுடுவைத்தான் குறிப்பிடுகிறதென்று அவ்வேலைக்காரனே கான்ஸ்டேபிள் கேட்டதின்மீது விவரித்தான்."

ஸஞ்சீவ.—"மாடியின்மீது பிரேதமொன்றைக் கிடத்திவிட்டு வாசற்கதவுகளை யெல்லாம் நெடுகத் திறந்திருக்கும்படி செய்துகொண்டு எந்த மூடனும் இரானே! இதனாலேனும் ரங்கபாஷியம் நாயுடு தமது மனதில் களங்கமுடையவராக அந்த சமயம் இருந்திருக்கவில்லை யென்று ஏற்படலாமே?"

இன்ஸ்பெக்டர்.—"ஒரு கொலையை நிகழ்த்திவிட்டு உடனே புருஷரூபமானால்—என்று ரங்கபாஷியம் நாயுடு தன்னில் தானே பேசிக்கொண்டதைப்பற்றி என்னவிதமான அபிப்பிராயத்துக்கு வருவது? அந்தப் பேச்சினால், பெண் வேடம் புனைந்த தான் ஒரு கொலையைச் செய்திருப்பதாக அவர் புலப்படுத்திக் கொள்ளுகிறாரன்றோ?"

ஸஞ்சீவ.—"அவ்விதம் கூறிய அவரது வார்த்தைகளை அவர் தரித்த அந்தப் பெண்வேடத்தை சிலாக்கியப்படுத்திச் சொல்லப்படுவதற்குள்ள வர்ணனைகளோடு சேர்ந்த பேச்சுகளாகக் கொள்ளவேண்டுமேயன்றி வேறுவிதமாக நினைக்கக் கூடாது. காலவசத்தால் ஒருவர் வாய்தவறி ஒருசமயத்தில் ஒரு வார்த்தையைச் சொல்லிவிட, ஒரு கடிதத்தில் ஒன்றை சாதாரணமாகவே எழுதியனுப்பிவிட, முடிவில் அது பெரும் பிசகாய் முடிந்துவிடுகிறது. அப்படித்தான் ரங்கபாஷியம் நாயுடு தனது பெண்வேடத்தைச் சிறப்பித்துக் கொள்வதற்காகக் கூறிய வார்த்தைகளும் இப்போது விபரீதார்த்தத்துக்கு வந்துவிட்டன. அதைக் குறித்துப் பிறகு யோசிப்போம்.

பெண்வேடம் தரித்தது பிரேமநாதனைக் கொல்வதற்கு முன்னரா பின்னரா ?"

இன்ஸ்பெக்டர்.—"எப்படியேனும் பாவித்துக்கொள்கிறது. அதைப்பற்றி இப்போதென்ன ?"

ஸஞ்சீவ.—"இதுபோன்ற விஷயங்களில் எந்த விஷயத்தையும் நாம் அற்பமென்று கருதிவிடக்கூடாது. இதைப் பற்றிய உங்களின் அபிப்பிராயப் போக்கு எனக்குத் தெரிய வேண்டும்."

இன்ஸ்பெக்டர்.—"பிரேமநாதனைக் கொன்று விட்டுப் பிறகு தப்புவிப்பதற்காக ஸ்திரீ வேடம் தரித்திருக்கவேண்டுமென்று காண்கிறது."

ஸஞ்சீவ.—"ஒருவனைக் கொன்று நெடுமரம்போல் கிடத்திவிட்டு, அத்துடன் கதவுகளையெல்லாம் நெடுகத் திறந்து வைத்துவிட்டு, பிறகு சாவதானமாக—தான் பெண்வேடம் தரிக்கச் சென்றான் என்றால் அது எப்படிப் பொருந்தும்? வேடத்தை ஒழுங்காகத் தரிப்பதற்கான மனவமைதி வேண்டாமா? அப்படிச் செய்ய எப்படித் தான் புத்தி ஓடும்? நம்மை அந்த ஸ்திதியில் வைத்துப்பார்த்துச் சற்றே யோசித்துக்கொள்ள வேண்டும்."

இன்ஸ்பெக்டர்.—"ஒருசமயம் ஏற்கெனவே பெண் வேடம் தரித்துக்கொண்டிருந்து, பிரேமநாதன் மாடியின் மீது வந்ததும் அவனைக் கொன்றுவிட்டு, பிறகு, அவன் தன்னை எதிர்த்ததில் கலைந்து போனவற்றைச் சரிப்படுத்திக்கொள்ள முயன்றதாக நாம் நிதானிக்கக் கூடாதா ?"

ஸஞ்சீவ.—"அதைப் பிறகு கவனிக்கலாம். பிரேமநாதன் மாடியின் மீது வந்தபிறகே, தனக்கு அபாயம் சூழ்ந்திருக்கிறதென்று உணர்ந்தவனாக வேண்டும். அப்படி அவன் உணருகிற தருணமானது—ரங்கபாஷியம் நாயுடுவால் அவன்